சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம் வழியாக திருக்குறள் நெறிப்படி ஓவியப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல் - 2021-2022-ஆம் ஆண்டிற்கான தொகை ரூ.10,00,000/- நிதியொப்பளிப்பு செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.2)த் துறை

அரசாணை (ப) எண்.118

நாள் 23.11.2021

பிலவ, கார்த்திகை-7

திருவள்ளுவராண்டு 2052

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (ப) எண்.171, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 1.2)த் துறை, நாள். 29.12.2020.

படிக்க:

2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண்.4107/வசெ.2/2021, நாள் 14.07.2021 மற்றும் 20.09.2021.

******

ஆணை:

2019-2020-ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கை 46-ன்போது கீழ்க்காணும் அறிவிப்பு அறிவிக்கப்பட்டது:-

**"உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம் வழியாக ஆண்டுதோறும் ஓவியப் போட்டிகள் நடத்தப்படும். இப்போட்டியில் திருக்குறள் நெறிப்படி சிறந்த ஓவியம் படைப்பவருக்கு பரிசு வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்."**

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம் 2020-2021-ஆம் ஆண்டிற்கான திருக்குறள் நெறிப்படி ஓவியப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குவதற்குத் தொடர் செலவின வகைப்பாட்டில் ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிதியொப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ் வளர்ச்சி இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடத்தின் வாயிலாக 2021-2022-ஆம் ஆண்டு திருக்குறள் ஓவியப் போட்டி நடத்தப்பட வேண்டியுள்ளது என்றும், திருக்குறள் நெறிப்படி ஓவியப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குவதற்கு தொடர் செலவின வகைப்பாட்டில் 2021-2022ஆம் நிதியாண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.10,00,000/-ஐ (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) அரசு நிலையில் கருதி பார்த்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ஒப்பளிப்பு செய்யலாம் எனத் தமிழ் வளர்ச்சி இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

4. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் அவர்களின் செயற்குறிப்பின் அடிப்படையிலான தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் பரிந்துரையினை ஏற்று கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:-

(i) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம் வழியாக 2021-2022-ஆம் ஆண்டுக்கான திருக்குறள் ஓவிய போட்டி நடத்த ரூ.10,00,000/-ஐ (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிதியொப்பளிப்பு செய்யப்படுகிறது.

(ii) இந்நிகழ்ச்சிக்கான செலவினங்களை தமிழ்நாடு நிதிவிதியியல் கோட்பாடுகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும்;

(iii) இத்திட்டத்திற்காக பெறப்படும் தொகை உரிய திட்டத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்; மற்றும்

(iv) இத்திட்டத்திற்கென பெறப்படும் தொகைக்கான பயனீட்டுச் சான்று மற்றும் செலவின விவரங்களை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் அவர்களிடமிருந்து பெற்று தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு அனுப்பிட வேண்டும்.

5.மேலே பத்தி 4(i)-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படுவதுடன் மேற்படி தொகையை 2021-2022-ஆம் ஆண்டுக்கான திருத்த

வரவு - செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கத்திலிருந்து மேற்கொள்ள வேண்டும்:-

"2202 பொதுக் கல்வி - 05 மொழி வளர்ச்சி - 102 இக்கால இந்திய மொழிகள் மேம்பாடும் இலக்கிய மேம்பாடும் - மாநிலச் செலவினங்கள் - AB சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு மானியங்கள் - 309 உதவித் தொகை -03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"

IFHRMS (த.தொ.கு. 2202 05 102AB309 03)

6. மேலே பத்தி 4(i)-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் அவர்களுக்கு வழங்கிட, தமிழ் வளர்ச்சித் துறை, இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.50408/நிதி(தவ(ம)செ)/2021, நாள் 18.11.2021-இல் பெறப்பட்ட இசைவுடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை-8.
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113.
(தமிழ் வளர்ச்சி இயக்குநர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு),சென்னை-8
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-9/18.

நகல்:

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் அவர்களின்
முதன்மை தனிச்செயலர், சென்னை-9.
நிதித்(தவ(ம)செ) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
23.11.2021